டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 2.11.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 135 - Madurai | Online Edition

# நீர்வாழ் உயிரின உணவு மதிப்புச் சங்கிலிகளை வலுப்படுத்துவது குறித்த பயிலரங்கு சென்னையில் நடைபெற உள்ளது

புது தில்லி, டிச.1

உலகின் மீன்களை அதிகம் சார்ந்திருக்கும் பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் மீன்பிடிப்புக்கு பிந்தைய இழப்புகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், நீடித்த நீர்வாழ் உயிரின உணவு மதிப்புச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் குறித்த மூன்று நாள் பயிலரங்கு சென்னையில் செவ்வாய் (2.12.25) அன்று தொடங்குகிறது.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் வங்காள விரிகுடா திட்ட அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆகிய வற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து சவால்களை களைவதற்காக 11 ஆசிய நாடுகளைச் சேர்ந்த உயர் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிபுணர்களை ஒன்றிணைக்கிறது.

இந்தியா, சீனா, பங்களாதேஷ், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் தேசிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். கடல்சார் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்புக்கு பிந்தைய மேலாண்மையில் இந்தியா தனது புதுமை கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்த உள்ளது.

கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய தலைவர் டி வி சுவாமி தலைமை விருந்தினராகவும், புதுச்சேரி மீன்வளத் துறை செயலாளர் டாக்டர் டி மணிகண்டன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

ரோம் மற்றும் பாங்காக்கில் உள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்பைச் சேர்ந்த உயர்நிலை பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தளிர்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்புகூட்டல் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், டிச.1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கோயம்புத்தூர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் காய்கறி அறிவியல் துறையின் சார்பாக வரும் 16.12.25 (செவ்வாய்) அன்று தளிர்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

மனித உடல்நலத்திற்கு தேவையான பெருமளவு சத்துத் தேவையை தளிர்கீரைகள் நிறைவு செய்கின்றன. தளிர் கீரை களிலிருந்து பெறப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஊட்டச் சத்து நிறைந்தவையாகவும் உடல் நலத்தை மேம்படுத்து வதாகவும் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தளிர் கீரைகள் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த திறன் பயிற்சி தொழில் முனைவோருக்கு வழங்கப்படுகிறது.

பின்வரும் தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

- செயல்முறை சாகுபடித்திறன்கள்
- ஊட்டச்சத்து நன்மைகள்
- உணவுப் பாதுகாப்பு வழிமுறைகள்
- தர நிலைநிறுத்தம்
- நீடித்த வருவாய்
- மதிப்பு கூட்டல்
- வணிகத்துக்கு வழிகாட்டல்
- சந்தை வாய்ப்புகள்

பயிற்சி நிகழ்விடம் : காய்கறி அறிவியல் துறை, தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. (பேருந்து நிறுத்தம் : வாயில் எண் 7 (தாவரவியல் பூங்கா), மருதமலை சாலை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் – 641 003.) (காந்திபுரத்திலிருந்து 1A, 1B, ID, 70, 76, 64ம்), (தொடர்வண்டி நிலையத்திருந்து, சிங்கா நல்லூரில் இருந்து 1C).

ஒரு நாள் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சிக் கட்டணமாக ரூ.2000 /– (சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு உள்பட) செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் – 641 003. மின்னஞ்சல் : vegetables@tnau.ac.in, கைபேசி : 89036 94612, தொடர்பு நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 9.00 முதல் மாலை 5.00 வரை).






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



திண்டுக்கல், டிச.1

திண்டுக்கல் மாவட்டம், அணைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், கலந்து கொண்டு தலைமை வகித்தார். அவர் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா உள்ளிட்ட நானோ மற்றும் திரவ உரங்களின் பயன்கள், பயன்பாட்டு முறை, மற்றும் பல்வேறு பயிர்களில் பெறப்படும் விளைவுகள் குறித்து விரிவாக விளக்கினார். நானோ உரங்கள் பயன்படுத்துதல் மூலம் உற்பத்தி செலவு குறைதலும், மண் வளம் பாதுகாப்பதும் முக்கிய நன்மைகளாகும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர், இப்கோவின் சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டம் குறித்து அறிமுகப்படுத்தி, நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு கிடைக்கும் என்பதை அவர் தெரிவித்தார்.

அடுத்து, இப்கோ கள அதிகாரி கார்த்திகேயன், இரசாயன உரங்களின் அதிகப்படியான பயன்பாடு மண்மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தினார். இதற்கு மாற்றாக நானோ உரங்கள் ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்றும் கூறினார். மேலும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிப்பதற்கு இப்கோ கிசான் ட்ரோன் சேவையைப் பயன்படுத்தலாம் என்றும், நானோ உரங்களுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் சேர்த்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறைக்கலாம் என்றும் அறிவுறுத்தினார். நிகழ்ச்சியின் இறுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

நன்றி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் துல்லிய உயிரியல் யுகத்தில் வளர்சிதை மாற்றவியல் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம்

கோயம்புத்தூர், டிச.1

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து, துல்லிய உயிரியல் யுகத்தில் வளர்சிதை மாற்றவியல் என்ற ஒரு நாள் கருத்தரங்கம் 29.11.25 அன்று நடைபெற்றது.

150-க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.



இக்கருத்தரங்கில் உயிரி தொழில்நுட்ப தகவலியல் ஆராய்ச்சி-யாளர் விஷ்ணு ராஜ், மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நவீன உயிரியல் ஆராய்ச்சி மற்றும் துல்லிய மருத்துவத்தில் (precision-base healthcare) மெட்டபாலோமிக்ஸ்-ன் பங்களிப்பின் முக்கியத்து வத்தினை எடுத்துரைத்து சிறப்புரை யாற்றினார். இந்த மெட்ட பாலோ மிக்ஸ் துறை ஆரம்ப கால உயிர் வேதியியல் ஆய்வுகள் முதல் மாஸ் ஸ்பெக்ட்ரோ மெட்டரியை அடிப்படையாகக் கொண்ட விவரக் குறிப்பு வரை, குறிப்பிட்ட வளர்சிதை மாற்றங்களை கண்டறியும் பகுப்பாய்வு அணுகுமுறைகளையும் விவரித்தார். குரோமடோகிராமின் அடிப்படையில் எவ்வாறு வளர்ச்சிதை மாற்ற மூலக்கூறுகள் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகிறது என்பதை செயல் முறையில் எடுத்துரைத்தார்.

வளர்ச்சிதை மாற்ற பகுப்பாய்வு மாதிரிகளை தயார்படுத்துவதற்கான செயல்முறை விளக்கம், வளர்ச்சிதை மாற்ற பகுப்பாய்வில் தரவு பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்படும் மென் பொருட்கள் மற்றும் புள்ளி விவர சரிபார்ப்பு ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் இந்த மெட்டபலோமிக்ஸ் எவ்வாறு மருத்துவத் துறையில் தனிப்பட்ட மருத்துவ மாதிரிகளை கண்டறிய உதவு கிறது என்பதையும் பிற துறைகளான விவசாயம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிர் தகவலியல் பயன்பாடுகள் மற்றும் இத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளைப் பற்றி கூறினார். முதலில் எது தோன்றியது, மரபணு அல்லது அதன் கட்டுமானத் தொகுதிகளை உருவாக்கும் வளர்சிதை மாற்றிகளா? என்று அவர் மாணவர்களிடம் வினாவிய போது மாணவர்கள் யூரி–மில்லர் பரிசோதனையைக் குறிப்பிட்டு, வளர்சிதை மாற்றி என சரியாக பதிலளித்தனர்.

தொடக்க நிகழ்வில் முனைவர் ச.வெள்ளைகுமார், இணை பேராசிரியர் தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, TNAU, கோயம் புத்தூர் வரவேற்புரை நிகழ்த்தினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின், தாவர உயிரித் தொழில்நுட்ப துறை முனைவர். கே.ஹேமா ப்ரபா, இணை பேராசிரியர் தொடக்க உரையாற்றினார். முனைவர் வி. ராஜன்பாபு துணை பேராசிரியர், தாவர உயிரித் தொழில்நுட்ப துறை, நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை தாவர உயிரித் தொழில்நுட்ப துறை மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மக்காசோளப் பயிரைத் தாக்கும் அடிச்சாம்பல் நோய்

## தாக்குதலின் அறிகுறிகள்

● பெரனோஸ்கிரோஸ்போரா சொர்கி என்ற பூஞ்சைக் காளான் மூலம் இந்நோய் ஏற்படுகிறது.

● இலையில் வெளிரிய கீற்றுகள் தோன்றுவது முக்கிய அறிகுறி ஆகும்.

● செடியானது, குட்டையாகவும், வளர்ச்சி குன்றியும், கணு இடைவெளி குறைந்தும் காணப்படும்.

● வெண்மையான சாம்பல் பூச்சானது இலையின் அடியிலும், அதற்கு இணையான இலையின் மேற்பரப்பிலும் காணப்படும்.

● முழுமையாக விரியாத பசுமையான ஆண் மலர்களின் உறையில் இப்பூச்சானது காணப்படும்.

● ஆண் மலரில் சில நேரங்களில் சிறிய இலைகள் போன்ற பகுதி தோன்றும்.

● தண்டின் பக்க மொட்டுகளில் இருந்து பக்கவாட்டு கிளைகள் தோன்றும்


## நோய் பரவலுக்கு ஏற்ற காரணிகள்

● குறைந்த தட்பவெட்பம் (21 - 33 டிகிரி செல்சியஸ்).

● அதிக காற்று ஈரப்பதம் (90 சதம்) மற்றும் தொடர் மழை/தூறல்.

● இளம் செடிகள் மிக அதிகமாக பாதிக்கப்படும்.





இலையில் வெளிறிய கீற்றுகள்

## மேலாண்மை

● அடிச்சாம்பல் நோயினால் பாதிக்கப் பட்ட செடிகளை அறிகுறிகள் தெரிந்தவுடன் பிடுங்கி அழிக்கவும்.

● சிறந்த நோய் எதிர்ப்பு இரகமான - கோ எச் (எம்) 6, கோ எச் (எம்) 8, கோ எச் (எம்) 11 விதைக்கலாம்.

● சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா

விரிடி 1 கிலோ / ஏக்கர் + 20 கிலோ மக்கிய தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்து நடவு செய்த 20 நாட்களுக்குப்பின் வயலில் இடவும்.

● மெட்டலாக்சில் @ 6 கிராம் / கிலோ விதையுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

● ஏக்கருக்கு மெட்டாலாக்சில் (50 % WP) @ 400 கிராம், மேன்கோசெப் (75% WP) @ 400 கிராம் என்ற அளவில் விதைத்த 20ம் நாள் தெளிக்கவும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.




# அலங்கார மீன் வளர்ப்பு - ஒரு பார்வை




இன்றைய கால கட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பு (அ) வண்ண மீன் வளர்ப்பு ஒரு சிறந்த பொழுது போக்கு (HOBBY) அம்சமாக மட்டுமல்லாமல் வேலை வாய்ப்பு தரும் ஒரு தொழிலாக உள்ளது. பெரிய பெரிய நகரங்களில் இருந்த இந்த வண்ண மீன் வளர்ப்பு இன்றைய காலத்துல் கிராமப் புறங்களிலும் உள்ளது. எளிய முறையில் குறைவான முதலீட்டில், குறைந்த பரப்பில் அலங்கார மீன் வளர்ப்பை மேற்கொள்ளலாம்.

**வளர்ப்பிக்கேற்ற வண்ண மீன்கள்?**

மீன்களை இனப்பெருக்கத்தின் அடிப்படையில் இரண்டு வகையாக பிரிக்கலாம்.

**1) முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் தன்மையுடைய மீன்கள்**

பொன் மீன், ஏஞ்சல், டிஸ்கஸ், கௌராமி, ஆஸ்கர், போராளி மீன், டெட்ரா

**2) குட்டி போடும் தன்மையுடைய மீன்கள்**

கப்பீஸ், மோலிகள், பிளாஸ்டிக்குகள், வாள்வால் மீன்

**அலங்கார மீன்களுக்கான உணவு (FOOD ITEMS)**

1) உயிருள்ள உணவு, 2) உலர் உணவு

**உயிருள்ள உணவு வகைகளில்**

இன்புசோரியா, பாடப்னியா, கொசு, மண் புழு மற்றும் ராட்டினம்

**உலர் உணவு (DRY FOODS)**

அரிசித்தவிடு புண்ணாக்கு, மீன் தூள் மற்றும் கிழங்கு மாவு ஆகியவற்றை கலந்து கொள்ளலாம்.

**அலங்கார நீர் தாவரங்கள்**

அலங்கார மீன் வளர்ப்பில் கண்ணாடி தொட்டிக்கு அழகு சேர்ப்பதில் நீர்தாவரங்கள் (WATER PLANTS) மிக முக்கியமானதாக உள்ளது.

நீர் தாவரங்களான ஹைடிரில்லா, வேலம்பாசி, செரட்டோ பில்லம், மீன்களின் சுவாசத்திற்கு வேண்டிய ஆக்ஸிஜனை நீரில் உற்பத்தி செய்கின்றன. மீன்கள் முட்டைகள் ஒட்டிக் கொள்ளவும் குஞ்சுகள் பாதுகாப்பாக மறைத்து வாழவும் உதவுகின்றன.

**வண்ண மீன்கள் வளர்ப்பில் கவனிக்க வேண்டியவை**

1) நீரின் தரத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டியவை.

2) தேவைக்கு அதிகமாக உணவு கொடுக்க கூடாது.

3) பிராணவாயு சரியாக இருக்க வேண்டும், குறையக்கூடாது, அதிகரிக்கவும் கூடாது.

4) வெப்ப மாறுபாடு இருக்க கூடாது.

5) சுற்றுப்புற சூழல் கேடு இருந்தாலும்கூட நோய்கள் தொற்று மீன்களில் வரலாம்.

**மீன்களின் நோய்களின் அறிகுறி எப்படி இருக்கும்?**

1) நோய் வாய்ப்பட்ட மீன்கள் சரியாக உணவு உண்ணாமை

2) துடிப்பாக நீந்தாமல் தொட்டி ஓரமாக ஒதுக்குதல்



**அலங்கார மீன் வளர்ப்புக்கு அரசு வழங்கும் மானியத் திட்டங்கள்?**

**1) கொல்லைப் புற அலங்கார மீன் வளர்ப்பு**

இதற்கு ஒரு யூனிட் அமைக்க 3 லட்சம் செலாகும். இதில் பொது பிரிவினருக்கு 40% மானியமும், ஆதிதிராவிடர்/மகளிருக்கு 60% மானியமும் வழங்கபடும்.

**2) நடுத்தர அளவிலான அலங்கார மீன்வளர்ப்பு**

இதற்கு ஒரு யூனிட் அமைக்க 8 லட்சம் செலவாகும். மேலே குறிப்பிட்ட படி பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர்/மகளிருக்கு மானியம் வழங்கப்படும்.

தங்களுடைய வட்டாரத்திலுள்ள மீன் வள ஆய்வாளர் அல்லது மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயிற்சி திட்டம் - தேங்காய் பயிர் செய்கை

திருப்புத்தூர், டிச.1

திருப்புத்தூர் மாவட்டம், அம்பூர் வட்டாரத்தின் கீழ்க்கு உட் பட்ட நாச்சியார்க்குப்பம் கிராமத்தில் தேங்காய் பயிர்ச்செய்கை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அட்டா திட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஊராட்சி நிலைப்பயிற்சி நிகழ்ச்சி நடத்தப் பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி தலைவர் சரஸ்வதி தலைமை யேற்று கலந்து கொண்டு வழிகாட்டல் அளித்தார்.

இயக்குநர் சங்கீதா, உதவி இயக்குநர் (தோட்டக்கலைத் துறை) தலைமை தாங்கி, தேங்காய் பயிரில் முதல் கட்ட முதல் நிலை தயாரிப்பு முறைகள் குறித்து புது புது தொழில்நுட்பங்களுடன் நாள் முழுவதும் பயிற்சி வழங்கினர். இயற்கை உரம் சேர்த்து, 5 அடி இழுவை நெறியில் நடவு செய்வது குறித்து விளக்கி, தட்டையான சூழலில் தேங்காய் செடிகள் சிறப்பாக வளர்வதற் கான முறை விளக்கினர். ஒரு தேங்காய் செடியின் வளர்ச்சி பராமரிப்பு, உரம் சேர்க்கும் நேரம், நீர்ப்பாசன மேலாண்மை, நுண்ணுயிர் சந்தைகள் பயன்பாடு, பறக்கும் பூச்சி மற்றும் இலை நோய் மேலாண்மை, erm நோய் கட்டுப்பாடு ஆகியவற்றின்

சிறப்பம்சங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் புதிதாக தோன்றும் தேங்காய் நோய்கள் குறித்து விரிவாக விளக்கமும் வழங்கப்பட்டது.



கரும்பு, மிளகு போன்ற நிலங்களில் துளி நீர் பாசனம் அமைப்பின் மூலம் நீர் பயன்பாட்டைக் குறைப்பதற்கான திட்டங்கள், தீபா உழவுத் திட்டம் மூலம் துளி நீர் பாசனம் மூலம் தேங்காய் பயிர்களைப் பாதுகாப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்ற தகவல்களும் வழங்கப்பட்டன. இதற்கு 100% மானியத் திட்டம் மூலம் விவசாயிகள் பயனடையலாம் என்றும், மொத்தம் 75% மானியத்தில் துளி பாசன வசதி கிடைக்குமெனவும் அவர் தெரிவித்தார். மேலும், மண் பரிசோதனை மூலம் செய்யப்படும் ஆலோசனைகள் தேங்காய் பயிரில் மானியத் திட்டங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

நெடுஞ்சாலை (FR) நிலம் தொடர்பான விண்ணப்ப செயல் முறைகள், தேங்காய் பயிர் வளர்ச்சிக்கான சந்தை இணைப்பு, விற்பனை வசதி, கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்பு ஆகிய வற்றும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன. அம்பூர் வட்டாரத்தில் தேங்காய்க்கு அதிக சந்தை மதிப்பு இருப்பதால், விவசாயிகள் இதனை பெருமளவில் பயிரிட்டு லாபம் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் என்.எம்.வி. வேளாண்மை பல்கலைக்கழக மாணவர் சுந்தர்ராஜன் கலந்து கொண்டு, 40-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குத் தேங்காய் பயிர்ச் செய்கை தொடர்பான துறைத் தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உழவன் தொழில்நுட்ப மேம்பாட்டு மானியங்கள் பற்றியும் பெருமளவு தெரிவிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு புதுமையான துத்தநாக உரத்திற்கு காப்புரிமை

கோயம்புத்தூர், டிச.1

தாவரங்களில் துத்தநாகத்தின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'எக்ஸோ-பாலிசாக்கரைடு அடிப்படையிலான கிலேட்டட் துத்தநாக உரம்' தொடர்பான காப்புரிமையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இந்த காப்புரிமை இந்திய அரசின் காப்புரிமை அலுவலகத்தால் 574341 என்ற எண் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காப்புரிமை முனைவர் கு.யாழினி, முனைவர் சு.தியாகேஸ்வரி, முனைவர் இரா.ஆனந்தம், முனைவர் து.செல்வி, முனைவர் எஸ்.மாரிமுத்து, ஆ.மணிகண்டன் மற்றும் முனைவர் இல.சித்ரா ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.



இந்த காப்புரிமை, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் டாக்டர் பட்ட மாணவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வில், நிலையான வேளாண்மைக்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த எக்ஸோ-பாலிசாக்கரைடு (EPS) எனப்படும் பொருளைப் பயன்படுத்தி, புதுமையான கிலேட்டட் துத்தநாக உரம் உருவாக்கப்பட்டது. சோடிக்தன்மை கொண்ட நெல் வயலின் வேர் பகுதிகளில் இருந்து பெறப்பட்ட பேசிலஸ் பாராலிச்செனிஃபார்மிஸ் என்ற நன்மை பயக்கும் பாக்டீரியாவின் செல் சுவரில் இருந்து இந்த EPS பிரித்தெடுக்கப்பட்டது. துத்தநாக அயன்களை பிணைக்கும்

திறன் இந்த EPS கொண்டுள்ளதால், 16.8% துத்தநாகம் கொண்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய Zn-EPS நுண்ணூட்ட உரம் தயாரிக்க உதவுகிறது. Zn-EPS உரத்தை பயன் படுத்தியதில், வழக்கமாக பரிந்துரைக்கப்படும் $ZnSO_4$ உரத்தை விட தாவர வளர்ச்சியும் விளைச்சலும் தெளிவாக அதிகரித்தன. இது எளிதில் சிதையும், மேலும் துத்தநாகத்தைச் சிறப்பாக பிணைத்து தாவரங்களுக்கு எளிதில் கிடைக்கும் பண்புகளால், துத்தநாகப் குறைபாடுகளை சமாளித்து, செயற்கை கிலேட்டர் களுக்கு மாற்றான, சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வாக, நீடித்த சத்து மேலாண்மையை ஏற்படுத்துகிறது.

இந்தக் காப்புரிமைப் பெற தேவையான மனு தயாரித்தல் முதல், காப்புரிமை வழக்கறிஞருடன் சேர்ந்து அதைச் சமர்ப் பிக்கும் வேலை வரை அனைத்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் தே.சுரேஷ்குமார், வழிகாட்டுதலில் செய்யப்பட்டது. இந்த செயல்முறைக்கு முனைவர் நா.நடராஜன், ஒருங்கிணைப்பாளராக செய்யப்பட்டார். இந்த கண்டுபிடிப்பின் காப்புரிமை பெற்றவர்களை துணைவேந்தர் முனைவர் ர.தமிழ்வேந்தன் நேரில் அழைத்து பாராட்டினார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# பருத்தி காயமுகல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**நோய்க்காரணிகள்**

● ஃபியுசேரியம் மொனிலிஃபார்மி, கோலிட்ரோட்ரைக் கம்கேப்சிஸி, அஸ்பெர்ஜில்லஸ்ஃபிலேவஸ், அ.நைகர், ரைஜோ பஸ்நைக்ரிகன்ஸ், போட்ரிடிப்லோடியா வகை போன்ற நோய்க் காரணிகள் காய் அழுகலுடன் தொடர்பு கொண்டுள்ளன.

**நோய்க்கு சாதகமான சூழ்நிலை**

● பூக்கள் மற்றும் காய்கள் உருவாகும் நேரத்தில் அதிகமழைப் பொழிவு

● பூச்சிகளால் உண்டாகும் காயங்கள்

● நெருக்கமான இடைவெளி

● பரிந்துரைக்கு அதிகமாக தழைச்சத்து உபயோகம்

அறிகுறிகள்

● காய் முழுவதும் கருப்பு (அ) பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும்.

● அழுகல், வெளியிலோ (அ) உட்பகுதியிலோ காணப்படும்.

● காய், வெடிக்காமல், இளம்பருவத்திலேயே உதிர்ந்துவிடும்.

**மேலாண்மை**

● போதுமான பயிர் இடைவெளி விடவும்.

● பரிந்துரைக்கப்பட்ட உர அளவை பயன்படுத்தவும்.

● கார்பென்டாசிம் (50% WP) 200 கிராம் (அ) மான்கோசெப் (75% WP) 800 கிராம் (அ) காப்பர் ஆக்ஸி குளோரைடு 1 கிலோ / ஏக்கர், 45-ம் நாள் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும்.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மிளகாய் பயிர்களில் பழ அழுகல் நோயை (ஆந்த்ராக்னோஸ்) நிர்வகிப்பதற்கான பயனுள்ள உத்திகள்

மிளகாய் (Capsicum annum) உலகம் முழுவதும் பயிரிடப்படும் முக்கிய மசாலாப் பயிர்களில் ஒன்றாகும், இது சோலனேசியே குடும்பத்தைச் சேர்ந்தது. உலகிலேயே மிளகாயை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடு இந்தியா.




இந்தியாவில், பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய நாடுகளில் கோடை காலத்தில் வணிக ரீதியாக பயிரிடப்படுகிறது. இது பல உணவு வகைகளில் பயன் படுத்தப்படுவது மட்டுமல்லாமல், பல மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது. கூடுதலாக, மிளகாய், புற்றுநோய் காரணிகள் டிஎன்ஏவுடன் பிணைப்பதைத் தடுப்பதன் மூலம் புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்கும்.



கோலெட்டோட்ரிச்சம் கேப்சிசி என்ற பூஞ்சையால் ஏற்படும் மிளகாய் ஆந்த்ராக்னோஸ், உலகளவில் மிளகாய் பயிர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகும். மிளகாய் ஆந்த்ராக் னோஸ் நோய் மிளகாய் பழங்களின் தரம் மற்றும் விளைச்சலை வெகுவாகக் குறைக்கிறது. இதன் விளைவாக விவசாயிகளுக்கு குறைந்த வருமானம் கிடைக்கிறது. இந்தியாவில், இது வயலில் உள்ள பழங்களுக்கும் சேமிப்பிலும் கடுமையான சேதத்தை ஏற்படுத்துகிறது மற்றும் 84 சதவீதம் வரை அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது இந்த அழிவுகரமான நோய் தாவர இலைகள் மற்றும் பழங்கள் இரண்டையும் பாதிக்கிறது, இதனால் மகசூல் இழப்பு மற்றும் பயிர் தரம் குறைகிறது. ஆந்த்ராக்னோஸின் சேதப்படுத்தும் தாக்கங்களிலிருந்து தங்கள் மிளகாய் அறுவடைகளைப் பாதுகாக்க விரும்பும் விவசாயிகளுக்கு காரணங்கள், அறிகுறிகள் மற்றும் பயனுள்ள மேலாண்மை உத்திகளைப் புரிந்துகொள்வது மிக முக்கியம்.

**நோயின் அறிகுறிகள்**

**இந்த நோய் இரண்டு கட்டங்களில் வெளிப்படுகிறது:**

**1. முதிர்ச்சியடைந்து பழுத்த பழ அழுகல்**

- முதன்மை அறிகுறிகளில் நுனியிலிருந்து தொடங்கி கீழ்நோக்கி முன்னேறும் மென்மையான கிளைகளின் நசிவு அடங்கும்.

- நோய் முன்னேறும்போது, கிளைகள் வைக்கோல் நிறமாக மாறக்கூடும்.
- நெக்ரோடிக் புள்ளிகள் முழுவதும் ஏராளமான கருப்பு புள்ளிகள் (பூஞ்சை அசெர்வுலி) சிதறிக் கிடப்பதைக் காணலாம்.
- கடுமையான தாக்குதல்கள் முழு தாவரத்தையும் வாடுவதற்கு வழிவகுக்கும்.
- பூஞ்சை பழ தண்டு மற்றும் தண்டையும் பாதிக்கலாம்.

**2. பழுத்த பழ அழுகல் கட்டம்**

- பழத்தின் தோலில் சிறிய, கருப்பு, வட்ட புள்ளிகள் தோன்றும்.
- கருப்பு விளிம்புகளுடன் கூடிய இந்த மூழ்கிய புள்ளிகள் பூஞ்சை வித்திகளின் இளஞ்சிவப்பு நிறத்தை உருவாக்கு கின்றன.
- நோய் முன்னேறும்போது, கருமையான பழச்சாறுகளுடன் கூடிய (பூஞ்சை அசெர்வுலி) செறிவான அடையாளங்கள் உருவாகின்றன, இதனால் முன்கூட்டிய பழ உதிர்தல் மற்றும் குறிப்பிடத்தக்க மகசூல் இழப்பு ஏற்படுகிறது.
- நோயுற்ற பழங்கள் வெட்டப்படும்போது, கீழ் தோல் மேற்பரப்புகள் பூஞ்சையின் சிறிய உயர்ந்த கருப்பு ஸ்ட்ரோமாடிக் வெகுஜனங்களால் மூடப்பட்டிருக்கும்.
- முதிர்ந்த நிலைகளில், விதைகள் பூஞ்சை ஹைஃபாவின் பாயால் மூடப்பட்டிருக்கும், இதன் விளைவாக துருப்பிடித்த நிறம் ஏற்படுகிறது.

**சாதகமான நிலைமைகள்**

சுமார் 28°C வெப்பநிலை, ஈரப்பதம் 92-95% மற்றும் பழம் பழுக்கும் கட்டத்தில் மழைப்பொழிவு ஆகியவை நோய் வளர்ச்சிக்கு சாதகமாக உள்ளன.

**பரவல் மற்றும் உயிர்வாழும் முறை**

- பூஞ்சை விதைகளால் வெளிப்புறமாகப் பரவுகிறது மற்றும் இரண்டாம் நிலை பரவல் காற்றில் பரவும் கொனிடியா மூலம் ஏற்படுகிறது.
- விதை மூலம் பரவும்
- வறண்ட சூழ்நிலைகளிலும், வயலில் தாவரக் குப்பைகளுக் குள்ளும் இறந்த கிளைகளில் உயிர்வாழ்வது நடைபெறுகிறது.

- ஈக்கள் மற்றும் பிற பூச்சிகள் - ஒரு பழத்திலிருந்து மற்றொரு பழத்திற்கு வித்துகளைப் பரப்புவதற்கு காரணமாகின்றன.

**தடுப்பு நடவடிக்கைகள்**

- விதைகளையோ அல்லது பழத்தோட்டங்களையோ நோயின் அறிகுறிகளுக்காக தவறாமல் பரிசோதிக்கவும்.
- வயல்களில் சரியான வடிகால் வசதியை உறுதி செய்யவும்.
- நடவு செய்வதற்கு நோயற்ற மிளகாய் விதைகளைப் பயன்படுத்தவும்.
- நோய்த்தொற்றுக்கான ஆதாரங்களாகச் செயல்படுவதால், பாதிக்கப்பட்ட பழங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தாவரக் குப்பைகளை வயலில் இருந்து அகற்றி அழிக்கவும்.
- அறிகுறிகளின் தீவிரத்தைக் குறைக்க பயிர்களை சீக்கிரமாக அறுவடை செய்யவும்.
- சோலனேசியஸ் அல்லாத பயிர்களுடன் (எ.கா. தட்டைப் பயறு, வெள்ளரி, பட்டாணி போன்றவை) 2-3 ஆண்டுகளுக்கு பயிர்களை சுழற்றுங்கள்.
- மழைத் துளிகளைக் குறைக்க தழைக்கூளம், இனோகுலம் பரவுவதைத் தவிர்க்கவும். 30-40 செ.மீ இடைவெளியில் 90 செ.மீ வரிசை இடைவெளியுடன் நடவும்.
- மேல்நிலை நீர்ப்பாசனத்தைத் தவிர்க்கவும், இலைகள் வறண்டு இருக்கவும், வித்து பரவலைக் குறைக்கவும் நேரடியாக மண்ணுக்கு தண்ணீர் ஊற்றவும்.
- பழங்கள் பழுத்தவுடன் அறுவடை செய்யவும்.
- பருவத்தின் இறுதியில் ஆழமான உழவைப் பயிற்சி செய்யவும்.



**வேதியியல் கட்டுப்பாட்டு முறைகள்**

- ஒரு கிலோ விதைக்கு கேப்டான் 50% WP @ 2 கிராம் அல்லது ஒரு கிலோ விதைக்கு கார்பென்டாசிம் 50% WP @ 2 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- இலைகள் மற்றும் கிளைகளில் முதல் அறிகுறி தென்படும் போது மற்றும் பழங்கள் உருவாகும் போது காப்பர் ஆக்ஸி குளோரைடு (COC) 50% WP @ 2 கிராம்/லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும்.
- பழங்கள் உருவாகும் போது கார்பென்டாசிம் 50% WP @ 2 கிராம்/லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும்.

உயிர் கட்டுப்பாட்டு முறைகள்


- மிளகாயில் கோலெட்டோட்ரிச்சம் இனங்களைக் கட்டுப் படுத்த டிரைக்கோடெர்மா இனங்கள் பூஞ்சை எதிரியாகும்


**தாவர சாறு கட்டுப்பாட்டு முறைகள்**

- வேம்பு இலைகள், புளிப்பு இலைகள், எலுமிச்சைப் புல் சாறு, டுபா வேர் சாறு மற்றும் கெனிகிர்/காஸ்மோஸ் காடேட் சாறு ஆகியவற்றின் சாற்றில் இருந்து கரிம பூச்சிக்கொல்லிகள் தயாரித்து மிளகாய் பழ அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.
- குறிப்பாக மிளகாய் நோயைக் கட்டுப்படுத்த வேம்பு இலைகள் மிகவும் பயனுள்ள கரிம பூச்சிக்கொல்லிகள் ஆகும்

கட்டுரையாளர் : **ம. பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : banumalai1996@gmail.com.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பாலில் சேரும் அசுத்தங்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

மாட்டின் பாலானது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கால்சியம், புரதம் மற்றும் வைட்டமின்கள் நிறைந்த ஒரு சிறந்த ஆரோக்கியமான உணவாகும். சுத்தமான பால் உற்பத்தி என்பது நுகர்வோரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் முக்கியமான செயல்பாடாகும். எனவே நல்ல தரமான மற்றும் சுத்தமான பால் உற்பத்திக்கு பண்ணை பராமரிப்பின் மூலம் சரியான மாடு பராமரிப்பு, சுத்தமான பால் தோகை மற்றும் சேமிப்பு முறைகள் மூலம் மட்டுமே உயர் தரமான பாலை உறுதிசெய்ய முடியும். இது நுகர்வோரின் நம்பிக்கையையும் உற்பத்தியாளர் களின் மதிப்பையும் உயர்த்தும்.

## பாலில் சேரும் அசுத்தங்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

கறவை மாடுகளின் மடியிலேயே சில கிருமிகள் இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆரோக்கியமான நோயற்ற மாடுகளில் இவ் வகையான கிருமிகள் எவ்விதக் கெடுதலும் செய்வதில்லை. எனவே, பால் கறக்கும் பொழுது முதலில் வரும் பாலினை கழித்து விடுவதன் மூலம் காம்பிலுள்ள கிருமிகளை ஓரளவு நீக்கி விட முடியும். மடியை தினமும் சோதித்து மடிவீக்க நோய் மற்றும் மடிக்காம்புகளில் புண் போன்றவை உள்ளதா என பரிசோதனை செய்ய வேண்டும். கறவை மாடுகள் கருச்சிதைவு, மடிவீக்கம் போன்ற நோய்களினால் பாதிக் கப்பட்ட மாடுகளிலிருந்து கறக்கப்படும் பாலை அருந்துவதற்கு பயன்படுத்தாமல் சுகாதாரமான முறையில் கழித்து விட வேண்டும். தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளிலிருந்து கறக்கப்படும் பாலை பண்ணைக்குள்ளோ பண்ணைக்கு வெளியோ, நீர்நிலை களிலோ, கழிவுநீர்க் கால்வாயிலோ ஊற்றாமல் ஆழக் குழி தோண்டி அதனுள் ஊற்றி புதைத்து விடுவதன் மூலம் பாலிலும், மற்ற கால்நடைகளுக்கும் நோய்த்தொற்று கிருமிகள் பரவுவதைத்; தடுக்க முடியும்.

மாடுகளின் உடலிலிருந்து உரோமம், மண், சாணம், வைக்கோல் போன்ற அசுத்தங்கள் பாலில் சேர வாய்ப்புண்டு. எனவே, மாடுகளை நன்கு தேய்த்து அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக மடியின் மீதும் மடியைச் சுற்றிலும் நீண்ட உரோமம் காணப்பட்டால் அவற்றைக் கத்தரித்து நீக்கி விட வேண்டும். பால் கறப்பதற்கு முன் மடி, மடியைச் சுற்றியுள்ள பகுதி மற்றும் தொடை ஆகிய பாகங்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட்

கலந்த நீரினால் கழுவி சுத்தமான உலர்ந்த துணியினால் துடைப்பதன் மூலம் பாலில் சேரும் பல வகையான அசுத்தங்களைத் தவிர்க்க முடியும்.

பால் கறக்கும் இடம் சுத்தமாக இருத்தல் வேண்டும். பால் கறக்கும் பொழுது கொட்டகையைக் கூட்டி சுத்தப்படுத்தும் பொழுது கொட்டகையின் காற்று அசுத்தமடைந்து பாலில் சேர வாய்ப்புண்டு. அதனால் பால் கறப்பதற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னரே கொட்டகையை கூட்டி சுத்தம் செய்து விட வேண்டும். குறுகிய வாயுள்ள பால் பாத்திரங்களை உபயோகிப்பதன் மூலம் காற்றின் மூலம் சேரும் அசுத்தங்களை ஓரளவு குறைக்க முடியும்.

தொழுவத்தில் ஈக்கள், கொசுக்கள் வராமல் தடுக்க சாணம், சிறுநீர் போன்றவற்றை அவ்வப்பொழுது அப்புறப்படுத்தி மொத்த கழிவுகளைப் பணணைக்குத் தொலை தூரத்தில் சேகரித்து வைக்க வேண்டும். மேலும், பண்ணையின் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்திக் கழுவிய பின் கிருமி நாசினி கொண்டு தெளிக்க வேண்டும்.

உடல் ஆரோக்கியமானவர் பாலை கறக்க வேண்டும். பால் கறப்பவர்க்கு உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தால் பால் கறக்கும் பொழுது தும்முவதாலும், இருமுவதாலும் கிருமிகள் பாலில் சேர வாய்ப்புண்டு. எனவே பால் கறப்பவர்க்கு தும்மல் இருமல் இருந்தால் பால் கறப்பதை தவிர்க்க வேண்டும். மேலும் பால் கறப்பவர் கைகளில் உள்ள நகங்களை நன்கு வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நகங்கள் நீண்டிருந்தால் அவற்றில் சேர்ந்துள்ள கிருமிகள் மூலம் பால் அசுத்தம் அடையும். பாலை கறப்பதற்கு முன் கைகளை சோப்பு கொண்டு நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து விட்டு உலர்ந்த சுத்தமான துணியால் துடைத்த பின் பால் கறக்கத் தொடங்க வேண்டும்.

நன்கு சுத்தம் செய்த பால் பாத்திரங்களைத் தான் பால் கறப்பதற்கு பயன்படுத்த வேண்டும். ஏனெனில் பால் பாத்திரங்கள் மூலம் தான் அதிகமான அசுத்தங்கள் சேருகின்றன. சரியாகச் சுத்தம் செய்யாத பாத்திரத்தில் உள்ள சிறு பள்ளங்கள், விளிம்புகள் ஆகியவற்றில் படிந்துள்ள பாலில் கிருமிகள் வளர்வதற்கு வாய்ப்பு அமைந்து விடுகின்றன. எனவே பாலைக் கறப்பதற்கும் சேகரிப்பதற்கும் உபபோயகப்படுத்தப்படும் பாத்திரங்கள், விளிம்புகள் பள்ளங்கள் இல்லாமல் ஒரே சீரான அமைப்புள்ளதாக இருத்தல் வேண்டும். இதனால் சுத்தம் செய்வது எளிதாக இருக்கும்.

மிக சுத்தமான சூழ்நிலையில் பால் உற்பத்தி செய்தாலும் கூடச் சில நேரங்களில் உரோமம், வைக்கோல், தூசி போன்றவை பாலில் மிதப்பதைக் காணலாம்.

எனவே கறக்கும் பாலானது பண்ணையை விட்டு எடுத்துச் செல்லும் முன் சுகாதாரமான முறையில் துணி அல்லது வடிகட்டி கொண்டு அசுத்தங்களை வடிகட்டி அகற்ற வேண்டும்.

ஒவ்வொரு முறை உபயோகிக்கப்படும் வடிகட்டி அல்லது துணியை நன்கு அலசி கொதிநீரில் வைத்து உலர்த்திபின் உபயோகிக்க வேண்டும். இதன் மூலம் கிருமிகள் பாலில் சேர்வதைத் தடுக்கலாம்.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை – 625 005.**

